உ
சிவமயம்

News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ புரட்டாதி மீ உக உ (1947 ஒக்டோபர் 7 செவ்வாய்க்கிழமை) [இல ருக

# ஐயனர் மகத்துவம்

## "செல்லாவிடத்துச் சினங் குற்றம்"

இந்திரனுடைய ஏவலாளரு என்னைத் தடுக்கத் துணிந்தானென்று அசமுகி அடங்காச் சீற்றங் கொண்டாளாய், "அடா, இந்திரன் ஏவலனே, உன்னால் தடுக்க முடியுமானால் தடுத்துப்பார்" என்றுசொல்லித் தன்கையிலிருந்த சூலத்தை வீரமாகாளர்மீது எறிதலும், அச்சூலம் வீரமாகாளருடைய மார்புக்கெதிரே வேகத்தோடு சென்றது; அதுகண்ட வீரமாகாளர் சரேலெனத் தாம் கையிற்கொண்ட வாட்படையினால் தமது மார்புக்கெதிரே வருஞ் சூலத்தை இரு துண்டமாகும்படி வெட்டினர்; அது கண்ட அசமுகி மனந் தரியாளாய்த் தன் தோழியாகிய துன்முகியின் கையிலிருந்த சூலப்படையை வாங்கிக்கொண்டு வீரமாகாளர்முன்பு காற்றெனவிரைந்து சென்று அவருடைய மார்பிலே குற்றுதற்கு ஓங்குதலும், உடனே வீரமாகாளர் அந்தச் சூலத்தையுந் தடுத்துத் தன் வாளினால் துண்டங்கண்டார்; கண்ட அசமுகத்தாள் சிறிது மனமிடைந்தனள்; இடைந்தவள் இம்மென்னுமுன் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அயல் ஓடிச்சென்று ஒரு கற்பாறையை அகழ்ந்தெடுத்து மீண்டுவந்து வீரமாகாளர்மீது வீசிவிட்டு நின்று ஆரவாரித்தாள்; கற்பாறை தமக்கெதிரே கடிதில் வரக்கண்ட வீரமாகாளர் அதனையும் தம்முடைய வாள்கொண்டு தடிதலும் கற்பாறையுடைந்தது; அவருடைய வாளும் ஒடிந்தது.

வீரமாகாளர் கையிற் கொண்ட வாட்படை ஒடிந்தமையைக் கண்டவுடனே அசமுகி கடல்போல் ஆரவரித்து "ஏ, வீரமாகாளா, நான் சொல்வதைக் கேள்; இந்த இந்திராணியை அரிபிரமேந்திராதி தேவரெல்லாம் போற்றும் என மூத்த தமயனாகிய சூரபன்மனிடஞ் சேர்ப்பதற்குக் கொண்டுபோகிறேனென்பதைச் சிறிதேனுஞ் சிந்தியாமல், உன் பேதைமதியால் என்னைத் தடுக்க முயன்றனை; என்னைத் தனித்தவளென்று எண்ணாதே; என் இளைய அண்ணனாகிய தாரகனுடைய சேனைகள் இந்தக் காட்டிற்கயலே சஞ்சரிக்கிறார்கள்; அவர்கள் உன்னைக் காண்பரேல் நீ மாண்டாயென் றெண்ணிக்கொள்: உன்னை வெல்லவுங் கொல்லவும் அவர்கள் வேண்டா; நானே இப்பொழுது உன்னைப் பிடித்துக் கடித்துத் தின்று என் கோபமும் பசியும் ஆறுவேன்: ஆனால் என்பசிக்கு நீ போதிய இரையாகமாட்டாயென் றெண்ணியே இதுவரையிற் கொல்லாதுவிட்டேன்; நீ செய்த பிழையைப் பொறுத்துக்கொண்டேன்; ஃபதாய் ஓடிப்போ" என வீராவேசத்தோடு இடியிடித்தாலென்னக் கூறினள்.

அசுரத்தி யுரைத்தமாற்றங்கேட்ட வீரமாகாளர் நிந்தைச் சிரிப்புச்செய்து "ஏடி, அசமுகி! நீ எனக்கு மாறாக ஓங்கிய சூலப்படை யிரண்டையும் என் வாட்படை கொண்டு துண்டங் கண்டு நிற்கின்றேன்: பெண்ணாய்ப் பிறந்தவளைக் கொன்றாலும் பழி வென்றாலும் வசையென்ற நியாயத்தினால் இதுவரையிற் கொல்லாதுவிட்டேன்; என் புத்தியைக் கேள்; இந்தத் தேவியை விட்டுவிட்டு ஓடிப்போகுதி: இல்லையேல் உன் ஒற்றைக்கரத்தை வாங்கிக்கொண்டே உன்னைத் தப்பவிடுவேன்" என்று கடிந்துரைத்தார்: இப்படிச் சொல்லக்கேட்ட அசமுகத்தாள், சிறிது நேரஞ் சும்மா நின்று, "இவன் வாட்படையுமின்றி நிராயுதனாய் நிற்கின்றான்: நிராயுதனுடன் யுத்தஞ் செய்வது முறையல்ல; அல்லாமலும் இவனை வெல்வதும் இலகுவான கருமமன்று; ஆனதால் இவன் ஒருபுறம் நிற்க, நான் இந்த இந்திராணியைப் பற்றிக்கொண்டு இவ்விடத்தை விட்டுப் போய்விடுவதே புத்தி" யென்று சிந்தித்து, தன் தோழி கையிற் பிடித்து வைத்திருக்கும்படி கொடுத்த இந்திராணியின் கரத்தைத் தன் கரத்தாற் பற்றிக்கொண்டு போகத் தலைப்பட்டாள்: அதனைக் கண்ட வீரமாகாளர், "ஏடி, தப்பிப்போகலாமென்று நினைத்தாய்: நில்லடி" என்று உரப்பிக்கொண்டு இம்மெனச் சென்று ஒற்றைக்கையினால் அவளுடைய கூந்தலைத் திரிகிப் பற்றிக்கொண்டு, மற்றைக் கையினால் உடைவாளையெடுத்து இந்திராணியைப் பற்றியுள்ளதாகிய அந்தக் கரத்தை ஒரேவெட்டாக வெட்டி அத்தேவியை மீட்டார்; கையொன்றுவெட்டுண்டவுடனே "அண்ணாவோ! அண்ணாவோ!" என்று அசமுகி கதறிக்கொண்டு நிலத்தில் விழ, வீரமாகாளர் அவளைத் தம் காலினால் உதைக்க, அவள் சகடைபோல் உருண்டாள்; உடனே அவள் பக்கலில் நின்ற துன்முகியை வீரமாகாளர் பார்த்து, நீயும் இந்தத் தேவியைக் கைப்பற்றினாய்; ஆனதால், உனக்கும் இதுவே தண்டனை" என்று கூறி அவளுடைய ஒற்றைக் கையையும் தம் வாட்படையால் வெட்டிவிட, அவளும் ஓ!ஓ! என்று கதறினாள்.

அசமுகி துன்முகி என்னும் இரு அசுரமகளிரும் தத்தம் கரங் குறையுண்டபோது பெரு வம்வேதனையுற்றுத் தரையிற் கிடந்து புலம்பினர்; பின்னர்த் தோழியாகிய துன்முகி தானுந் தேறித் தன் தலைவியையும் ஒருவாறு தேற்றினாள்; அசமுகியின் சோகம் கோபமாக மாறியது; ஆனாலும் அவளால் என்னசெய்யமுடியும்; "செல்லாவிடத்துச் சினங் குற்றம்" என்றல்லவா சொல்லுவர்; அவள் வீரமாகாளரை நெஞ்சம் புழுங்கப் பார்த்து

"உங்கள் தம்மையான்
சிறைப்படுத் தேனெனில்உலகம்
எங்கு மாள்கின்ற
சூரபன் மாவெனும் இறைவன்
தங்கை யன்றியான்;
எனதுரந்தனில் எழுந்தனவும்
கொங்கை யன்று;யான்
பேடியே குறிக்கொள்...."

எனப் புகன்றாள்.

ஏடா, வீரமாகாளனே! தேவர்களெல்லாரும் [illegible]

[illegible]

### பிரார்த்தனை

ஏதுக்க ளாலு மெடுத்த மொழி யாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட் டுளனெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்துசார் மின்களே.

## இலங்கைத் தேசீய கீதம்

### பரிசு ரூபா 1000

கொழும்பு வித்தியாகந்தோர் திரு. எஸ். எல். பி. கப்புகொட்டுவ பின்வருமாறு எழுதுகிறார்:—

இக்காலத்தில் அநேக தேசீயகீதங்கள் பற்பலரால் இயற்றப்பட்டு பகிரங்க கூட்டங்களிலும், சங்கீதக் கச்சேரிகளிலும் களியாட்டு விழாக்களிலும் பாடப்பட்டுவருகின்றன. அவற்றுட் சில மிக நீளமாயிருக்கின்றன. பெரும்பாலானவை இத்தீவில்வாழும் ஒரு சாராரையே குறிப்பிடுகின்றன.

கோட்டையிலுள்ள மெஸ்ஸர்ஸ் வி. டி. பி. பேர்ணண்டோ கம்பனியின் சொந்தக்காரராகிய திரு. வி. டி. பி. பேர்ணண்டோ அவர்கள் சிறந்த தேசீய கீதத்துக்கு 1000/- ரூபா பரிசளிக்க முன்வந்துள்ளார். இது சம்பந்தமாக இலங்கை முழுவதிலும் போட்டி நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தேவையான விபரங்களுக்கு 31-10-47க்கு முன்

## எங்கள் தலைவர் கடமை

### மதுவிலக்கு செய்வாரா?

நீர்வேலி திரு. செ. சேனாதிராசா பின்வருமாறு எழுதுகிறார்:-

ஏழைமக்கள் அன்றன்று உழைக்கின்ற பணத்தைப் பறிக்கும் நோக்கத்தோடு அரசாங்கத்தார் "மது", என்ற அரக்கனை ஏவிவிட்டு பணத்தைப் பறிக்கிறார்கள். இதனை இந்திய தலைவர்கள் பார்த்து, "மதுவிலக்கு" சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் எங்கள் இலங்கைத் தலைவர்களோ மதுவிலக்கு என்ற சொல்லை வாயாலே சொல்லக்கூட வெட்கப்படுகிறார்கள். உங்களுக்கு சுயராச்சியம் எடுத்து தருகிறோம், பூரண சுயராச்சியம் வாங்கி தருகிறோம் என்று சொல்லுகிற தலைவர்கள் "மதுபானம்" என்னும் அரக்கனை இலங்கையிலிருந்தும் துரத்திவிட்டால் எங்கள் நாட்டிற்கு முதல் செய்த பேருதவியையும்சுயராச்சியம் அடைவதனையும் நிசர்க்கும்.

எமக்கு எழுதும்படி கேட்கப்படுகின்றனர்.

# கொடியின் தத்துவம்

## தமிழர் அதிற் கொண்ட பெருமை

(சித்தாந்தம்)

முற்றொடர்

### தென்னாட்டுக் கொடிகள்

தென்னாட்டிலோ மிகப் பண்டைக் காலம் முதற்கொண்டு கொடி நாட்டற் பழக்கம் உண்டு. தமிழ் மூவேந்தர்களில் புலி, மான், பனையில் என்பவைகளை சோழ பாண்டிய சேரர்கள் முறையே கொண்டிருந்தார்கள் மன்னர்களைப் புகழும்போது கொடியைப்பற்றிப் பாடுவதுண்டு முத்தொள்ளாயிரத்தில் ஓர் அழகிய வெண்பாவில் உலாப்போந்த தலைவனைக் கண்ட ஒரு தலைவி தன் நெஞ்சில் எழுந்த கருத்துக்களில் முதலில் கொடியைக் குறித்த பரபு இங்கே குறிக்கத்தக்கது.

"கோடி பாடித் தேர்பாடிக் கோய்
நண்டார் மாறன
முடி பாடி முத்தாரம் பாடித்—
தோடியுலக்கை
கைம்மனையில் ஓச்சப்பெறுவனே
யானுமோர்
அம்மனைக் காவல் உளேன்."

ஆகவே கொடியைப் பற்றித் தமிழர் கொண்ட பெருமை கூறவும் வேண்டுமா? தமிழ் இலக்கியத்திலே கொடியைப் பற்றிப் பல மேற்கோள்கள் காணலாம். சங்க நூல்களிலும் உண்டு. திருமுருகாற்றுப் படையில்,

"கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி
சூரமகளிர் ஆடும் சோலை"

என்று அரமகளிர் கோழிக் கொடியை முருக வழிபாட்டில வாழ்த்திய செய்தியும்,

"சேருபுகன் றெடுத்த சேணுயர்
நெடுங்கொடி
வரிபுனைப் பந்தொடு பாவை தூங்க
பொருநர்த் தேய்த்த போர் அருவாயில்
..............கூடல்"

என்று பிறர் வெல்ல முடியாக் கொடியைக் கூடற் பெருநகர் கொண்டிருந்த செய்தியும் கூறப்பட்டுள்ளன.

பிற்காலத்துக் கவிஞர்கள் கொடியைப் புகழ்ந்திருப்பதில் கம்பர் போன்ற பெருங் கவிஞர் பாக்களில் காணலாம். மேலும் தமிழரில் பல குலங்கள் உண்டு. அவைகள் தொழிலைப்பற்றி வந்தன. ஒவ்வொரு தொழில் இனத்திற்கு ஒவ்வொரு கொடி இருந்தது. இதன் விவரங்களை அகராதி முதலிய நூல்களில் கண்டு கொள்க. அவரவர்கள் தெய்வத் திருவிழாக்களில் இக்கொடிகளை எடுத்தாண்டு வந்தார்கள். இப்போது அவை பெரிதும் புறக்கணிக்கப்பட்டன. இது தமிழர் பழக்க முறைமை.

### சைவத்தில் கொடி

மேலே திருமுருகாற்றுப்படை

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஹூ
புரட்டாதி உகவ செவ்வாய்க்கிழமை

## "சுதந்திரம்" என்ருலென்ன?

I

சுவதந்திரம், சுதந்திரம், சுயேச்சை, சுயராச்சியமென்ற சொற்கள் அரசியல் சம்பந்தமான முறையில் இக்காலத்திலே பலவூர்களிலும் பல சாதியாராலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன; இச்சொற்களெல்லாம் ஒருபொருள் குறித்த பலசொற்களெனல் பிழையாகாது; ஆனால் சுதந்திரமென்ற ஒரு சொல்லை இங்கே எடுத்தாண்டுகொண்டு இதன் அர்த்தமென்ன, இக்காலத்தில்இதுஎந்தச்சந்தர்ப்பத்தில் வழங்குகின்றதென்பதைச் சிறிது ஆராய்வதனுல் நன்மையன்றித்தீமையாதுமில்லையெனலாம்சுவதந்திரம்என்பதற்குத் தன்வயமுடைமையெனவும், சுவதந்திரன் என்பதற்குத் தன்வயமுடையவன், எனவும் பொருள்கள் கொள்ளப்பட் டிருத்தலை அகராதிகளிற் காணலாம்; இதனுற்ருன் தம்வயமுடைய கடவுளுக்குச் சுவதந்திரர் என்னுங் குணமுஞ் சொல்லப்பட்டிருக்கிறது; இறைவனேடு மக்கள் முதலாம் உயிர்களை யொத்து நோக்கும்போது நாமெல்லாம் பரதந்திரர் ஆவோம்; சுவதந்திரமென்ற சொல்லே சுதந்திரமென மருவியதென்பர்; ஆனதினுற் சுதந்திரம் சுதந்திரன் என்னும் பதங்களுக்கும் மேலே சொல்லப்பட்ட பொருள்களையே கொள்ளலாம். மேலும் சுதந்தரம் சுதந்திரம் என்னுமிரண்டிற்கும் "இட்டமான ஆளுகை" "உரிமை" என்னும் பொருள்கள் பொறிக்கப்பட் டுள்ளன; எனவே சுதந்திர ராச்சியம் என்பதற்கு வேறு எச்சாதியினரிலும் எதன் பொருட்டேனுந் தங்கியிருத்தலின்றி, எதனையும் அந்த நாட்டிலுள்ள மக்கள் தாமாகவே நிர்வகித்து ஆளும் இராச்சியம் எனப் பொருள் கொள்ளுதல் பொருந்தும்; இப்படியே சுதந்திரநாடு என்பதற்கு எப்பொருளையும் விளைவினுலேனும் தொழின் முயற்சியினுலேனும் வியாபாரத்தினுலேனும் தன்னிடத்திலுள்ள மக்களால் ஆக்கி எவ்வகையான குறைவுமின்றி வாழும் நாடு எனப் பொருள் கொள்ளலாம்; நாடு என்பது இங்கே ஆகுபெயராய் நாட்டிலுள்ள மக்களைக் குறிக்கும்; மேலே சொல்லப்பட்ட இத் தன்மைகளெல்லாம் இல்லாதநாடு பரதந்திர நாடாக, அந்நாட்டு மக்களும் பரதந்திராவரென்பது தானேபெறப்படும். இக்காரணம்பற்றித் தான் இக்காலத்தில் எந்நாட்டினரும் சுயராச்சியம் சுதந்திர வாழ்வு தமக்குக் கிடைக்கவேண்டுமென்று முயற்சிசெய்து வருகின்றனர்; இப்படி முயற்சி செய்து இவற்றைப் பேரளவிலேனும் பெற்றவர் ஒரு அளவிற்குச் சிலகாலஞ் சந்தோஷப்படுகின்றனர்.

சுதந்திரத்தைப் பெற முயற்சி செய்யும் ஒவ்வொரு மக்களும் முதல் தாமே தனித்தனி சுதந்திரரா யிருக்க முயலவேண்டும்; சுவதந்திரம் என்ற இச்சொல் 'அடிமைத்தனம்' என்னுஞ் சொல்லுக்கு எதிர்ச்சொல்லாகும்; அதாவது சுதந்திர மற்றவர்களைப் பரதந்திரர்களெனவும், அடிமைத்தனமுடையவர்களெனவுஞ் சொல்லுதல் பிழையாகாது; ஒரு மனுஷ சந்மம் ஆணுக, பெண்ணுக, தான் தன்னளவிற் சுதந்திரமாய் வாழவேண்டுமென நினைத்தால், தன்னகத்துள்ள தீய இச்சைகளுக்கும் இயல்புகளுக்கும் அடிமையாகாது, அவற்றை யடக்கி முதல் தன்னளவிலேயே தான் சுதந்திரமுடையவனுய், இல்லையேல் சுதந்திர முடையவளாய் இருத்தல் வேண்டும்; உதாரணமாக பொன்னுசை, பெண்ணுசை, மண்ணுசை யென்னும் மூவகை ஆசைகளுள் ஒன்று மாத்திர முடையவனும், அந்த ஆசைக்கு அடிமையாகித் தன் சுவதந்திர புத்தியைப் பறிகொடுத்து விடுகிருன்; பெண்கள் விஷயத்திலே பெண்ணுசையை ஆணுசையென மாற்றிக்கொள்க; இவைமாத்திரமா? மக்களாயுள்ளார் ஆண்களாக, பெண்களாக அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல் முதலாம் தீய குணங்கள் செயல்களுக்கு அடிமைகளாகும்போது மனத்திலுள்ள நடுவுநிலைமை தடுமாறத் தம் சுவதந்திரத்தை இழந்து விடுகிருர்கள். தேர்தற் காலங்களில் நேரும் எதிரிடைகள், பிணக்குக்கள், சண்டை, கலகங்க ளெல்லாம், அத் தேர்தல் விஷயமாக முற்பட்டு நிற்போரும் அவர்கள் பொருட்டுப் பாடுபட்டு உழைப்போரும் தத்தமக்குரிய அகக்குணங்களிலும் செயல்களிலும் சுதந்திரமற்ருராய், அக்குணங்களுக்குஞ் செயல்களுக்கு மடிமைகளாயிருத்தலினுலேவருவனவாம்; சுவதந்திரத்தைப் பெறுவதற்காகிய முயற்சிகளைச் செய்யும்போது அழுக்காறு; அவா, வெகுளி, இன்னுச் சொல் எனப்படும் இந்நான்கு தீமைகளையும் அறவேயொழித்துத் தூய உள்ளத்துடன் கருமமாற்றல் வேண்டும்; இங்ஙன மில்லையேல் உண்மை நிலைகாண்டலரிது; தங்கள் தங்களிடத்துள்ள அடிமைக் குணங்களையுஞ் செயல்களையும் ஒழித்துத் தங்களைச் சுவதந்திரர்களாக்கிக்கொள்பவர்களே, நாட்டின் சுதந்திரத்தைப் பெறுதற்கு அருகராவர்.

இனி, உணவுப் பொருள் உடைப் பொருள் இன்னும் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் அந்நிய நாடுகளையும், அந்நியர் தயவையும் எதிர்பார்த்தவண்ணமிருக்கும் இந்த இலங்கை மக்களுக்குச் சுத[illegible] மென்னு மிலை[illegible] கொடு[illegible] தென்ருல், அவை உண்மையான சுதந்திரம் சுயராச்சியங்களாகமாட்டா; ஒரேநாட்டிலிருந்துகொண்டே சமூதாய பேதம் பாராட்டுவோர், சமய பேதம் பாராட்டுவோர், பெருமை சிறுமை கூறுவோர், ஒரே சமூதாயத்திற் பிளவுண்டாக்குவோர், அபிப்பிராய பேதத்தைப் பெரிதும் பாராட்டுவோர், சுயநலங் கருதுவோர், தமக்கு மூக்குப் போனுலும் சத்துருவுக்குச் சகுனப்பிழையாக வேண்டுமென்ற கொள்கை யுடையோர், ஒருநிலையில் நில்லாதவர், மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் பிரசாரணஞ் செய்வோர், தெய்வங் கொள்ளாதவர் இப்படிப்பட்ட மக்கள் ஒருகாலத்திலும் சுவதந்திரத்தைப் பெறுதற்கு அருகராகமாட்டார்கள். இவர்கள அதனைப் பெற்ருலும் விரைவிலே பறிகொடுப்பரெனச் சொல்லலாம்.

# மதுவிலக்கு

## காந்திஜியின் அபிப்பிராயம்

மதுவிலக்குச் சம்பந்தமாக சீர்திருத்தம் செய்வதற்கு இதுதான் ஏற்ற சமயம். இப்பொழுது பொதுஜன அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் இரண்டு பாகங்களும் இந்திய சமஸ்தானங்களும் இந்தச் சீர்திருத்தத்துக்குத் தயாராயிருக்கின்றன. இந்தியாவின் இரண்டு பகுதிகளிலும் உணவுப் பஞ்சமும் உடைப்பஞ்சமும் ஏற்பட்டிருக்கின்றன. ஜனங்கள் பட்டினியாயும் நிர்வாணமாயு மிருக்கும் இந்தச் சமயத்தில் லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கவேண்டு மென்று எண்ண யாரேனும் துணிவார்களா? மதுவையும் அபினையும் உபயோகிப்பதால் பணம் மட்டும் நஷ்டமாவதில்லை, மனத்தை யடக்கக்கூடிய சக்தியையும்கூட இழந்து விடுகிறேம். லாகிரி வஸ்துக்களை உபயோகியாத போது எந்தக் காரியங்களைச் செய்ய மாட்டோமோ அந்தக் காரியங்களை லாகிரி வஸ்துகளை உபயோகிக்கஆரம்பித்த உடன் செய்ய ஆரம்பித்துவிடுகிறேம். ஆகவே எந்தவிதமாகப் பார்த்தாலும் லாகிரிவஸ்து விலக்கு ஒரு ஜீவாதாரமான அவசியமாகும்.

மதுபானத் தீமையை சட்டங்களை இயற்றி மட்டுமே ஒழித்துவிடமுடியாது. லாகிரி வஸ்துவை உபயோகித்துப் பழகியவன் எப்படியும் அதை அடைந்துவிடுவான். அந்தத் தீய வியாபாரத்தை நடத்துகிறவர்களும் எளிதில் விட்டு விடமாட்டார்கள்.

ஆதலால் இந்தச் சீர்திருத்தம் வெற்றிகரமாக நடைபெறவேண்டுமானல் கீழ்க்கண்ட காரியங்கள் ஏககாலத்தில் நடைபெற வேண்டும்.

1. தேவையான சட்டத்தை இயற்றுதல்.

2 பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குதல்,

3. மதுபானக் கடைகள் உள்ள இடத்தில் அவைகளுக்குப் பதிலாக தீமை செய்யாத பானங்களை விற்கும் பலகாரக் கடைகளை ஏற்படுத்தல்,

4. நல்லவிதமாகப் பொழுது போக்குவதற்குரிய புஸ்தகங்கள் பத்திரி

தொடர்ச்சி 5 ம் பக்கம்

# ஏட்டிக்குப் போட்டி

## ஜூனகாத் - காஷ்மீரப் பிரச்சினை

கத்தியவார்ச் சமஸ்தானங்களில் ஒன்றுய ஜூனகாத், பாகிஸ்தானுடன் சேர்ந்திருப்பது இந்திய மக்களுக்குப் பெரும் மனக்கொதிப்பைக் கொடுத்துவிட்டது. இந்தச் சமஸ்தானத்தைச் சுற்றிலும் ஹிந்துமாகாணங்களே உள. அத்துடன் ஷை சமஸ்தானப் பிரஜைகளில் 100க்கு 80 விகிதமானேர் ஹிந்துக்கள். அப்படியிருப்பவும் ஜூனகாத் பாகிஸ்தானிற் சேர்ந்தமை நீதியல்ல என்று அந்தச் சமஸ்தானத்திற் கிளர்ச்சி நடக்கிறது. ஜூனகாத்துடன் சேர்ந்து அதற்குக் கீழ்ப்பட்ட இரு சமஸ்தானங்கள் இந்தியச் சமஷ்டியிற் சேர்ந்துவிட்டன. தனது உத்தரவைமீறி, ஷை இரு சமஸ்தானங்களும் இந்தியச் சமஷ்டியில் சேர்ந்ததால் ஆத்திரங்கொண்ட ஜூனகாத் நவாப், அவ்விரு சமஸ்தானங்களிலும் தம்படைகளை அனுப்பி வெருட்டி வருகிருர். இது கத்தியவார்ச் சமஸ்தானங்கள் அனைவற்றுக்கும் கலக்கத்தை உண்டாக்கிவிட்டது. இவை பண்டிதர் நேருவுக்கு விஷயத்தைத் தெரிவித்தன. அதன்பயனுக, இந்தியச் சமஷ்டியிற் சேர்ந்துள்ள கத்தியவார்ச் சமஸ்தானங்களின் பாதுகாப்புக்காக நேருஜி அங்கே இந்தியப்படைகளை அனுப்பியிருக்கிருர். அது நிற்க, ஜூனகாத்தல் உள்ள பிரசைகள், தம் நவாப்பின் செயலைக் கண்டித்து, ஓர் தற்காலிக அரசாங்கத்தை இராஜகேட்டை என்னும் சமஸ்தானத்தில் நிறுவி ஸ்ரீ ஜூத் சாமல்தாஸ் என்பவரை அவ்வரசாங்கத்துக்குத் தலைவராக்கியுளர். ஜூனகாத் தன் பிரஜைகளின் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அதன் முடிவுப்படி நடக்கவேண்டுமென்று இந்தியத் தலைவர்கள் கூறுகின்றனர்.

இது இவ்வாருக, காஸ்மீரம் சமஸ்தானத்திலே குழப்பத்தை ஏற்படுத்த முஸ்லீம்கள் முனைந்து நிற்கிருர்கள். ஜூனகாத் நவாப்புக்கு விரோதமாக ஹிந்துக்கள் நிற்பதால், காஷ்மீர மன்னர்க்கு விரோதமாக முஸ்லீம்கள் நிற்கவேண்டுமென்ற மனேபாவத்தினுலேயே இப்போது காஷ்மீரத்தில் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது அங்கே இனி ஒரு குடியரசுதான் தாபிக்கப்படுமென்றும், அதற்குத் தாமே தலைவர் என்றும் சொல்லி அன்வார் என்னும் ஓர் முஸ்லீம் ஓர் அறிக்கைவிட்டிருக்கிருர்.

காஷ்மீர மகாராஜா இனிச் சிம்மாசனத்திலிருக்க யோக்கியமில்லை என்று அன்வார் கூறுகிருர். காஸ்மீரத்தின் பிரஜைகளில் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள் என்பதும், மன்னர் ஹிந்து என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன.

## காலநிலை

பல வாரங்களாக இங்கே மழை பெய்யாமையினுல், முளைத்த நெற் பயிர்கள் வாடுகின்றன; இன்னுஞ் சில தினங்களுள்ளேனும் மழை பெய்யாதொழியின் இந் நெற் பயிர்கள் ஒருங் கெரிந்துவிடுமென விவசாயிகள் அஞ்சுகின்றனர்; [illegible] இராக்காலத்[illegible]ரோடு கூடிய காற்று வீசுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்கிடையே பிணக்கு?

## எதிர்க் கட்சிகளின் போக்கு

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

இலங்கைப் பாராளுமன்றத்து எதிர்க் கட்சித் தலைவராக யார் வருவது என்பதில், எதிர்க் கட்சிகளுக் கிடையே இப்போதே அபிப்பிராயபேதம் தோன்றிவிட்டது. இப்போதுள்ள எதிர்க்கட்சிகளில் டக்ரர் என் எம். பெரீராவின் சமசமாஜக் கட்சிதான் பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்றிருந்தபோதிலும், அவர் எதிர்க்கட்சித் தலைவராக வருதல், டக்ரர் கொல்வின் ஆர். டி சில்வாவுக்கோ, சமதர்மிகள் தலைவரான பீற்றர் கெனமனுக்கோ பிடிக்கவில்லை. இரண்டு கட்சிகள் உள்ள அரசாங்கங்களில்தான் எதிர்க்கட்சித் தலைவராக ஒருவர் இருக்கலாம். இங்கே இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகள் உளவாயையால் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டியதேயில்லை என்று மிஸ்ரர் பீற்றர் கெனமனும், டக்ரர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் கூறி அறிக்கை விட்டிருக்கிறர்கள். இவர்களுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக, டக்ரர் என். எம் பெரீரா எதிர்க்கட்சித் தலைவராளுல், அவருக்கிருக்கவேண்டிய மதிப்பையும் அந்தஸ்தையும், ஏனைய கட்சித் தலைவர்கள் அளிக்கமாட்டார்களென்பது சொல்லாமலே விளங்கும். ஆரம்பத்திலேயே, இந்த எதிர்க்கட்சிகளுக்கிடையே இந்தவிதமான அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருப்பது நல்ல உற்பாதமில்லை என்பதே எனது அபிப்பிராயம். இவர்கள் தங்களுக்கிடையே கொண்டுள்ள பரஸ்பர அபிப்பிராய பேதத்தால், மிஸ்ரர் சேனநாயக்காவின் அதிகார காலத்தை நீடிக்க முடியும்.

மிஸ்ரர் சேனநாயக்காவும். அவருடைய ஐக்கியதேசியக் கட்சியினரும் அரசியல் நிருவாகத்தை நடாத்துவதைக் கவிழ்க்க வேண்டும் என்பதில் சமசமாஜக்கட்சி, போல்ஷெவிக்லெனின்கட்சி, சமதர்மிகள், தமிழ்க்காங்கிரஸ் வாதிகள் யாவரும் ஒற்றுமையாக இருக்கிறர்கள். இவர்கள் அனைவரும் ஒருங்குசேர, அவர்களுடன் சுயேச்சைவாதிகளும் சேர்ந்தால், மிஸ்ரர் சேனநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடலாம் என்பது ஓரளவுக்கு உண்மை. ஆனல் கவிழ்க்கப்பட்ட அரசாங்கத்திற்குப் பதிலாக இன்னொரு அரசாங்கத்தை உருவாக்க இந்த எதிர்க் கட்சிகளுக்கு ஆற்றல்உண்டா? அதற்கான ஒற்றுமை இவர்களிடம் உண்டா? என்னும் இன்னோரன்ன கேள்விகள் இச்சந்தர்ப்பத்தில் எழுகின்றன உண்மையைக் கூறுங்கால் மிஸ்ரர் சேனநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்க்கவேண்டும் என்பதில் மாத்திரமே இவர்களுக்கிடையே ஒற்றுமையுண்டு ஏனைய விஷயங்கள்பலவற்றில் இவர்களுக்கிடையே ஒற்றுமையென்பது மருந்துக்குத்தானும் இல்லை.

மிஸ்ரர் சேனநாயக்காவின் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டால், தேசாதிபதி, அடுத்த பெரும் கட்சியான சமசமாஜிகளின் தலைவரான டக்ரர் என். எம் பெரீராவை அழைத்து மந்திரசபையை அமைத்து அரசாங்கததை நடத்தும்படி சொல்வார். இப்போதுள்ள நிலையில் தாம் ஓர்போதும் பொறுப்பேற்று அரசாங்கம் நடத்தமுடியாது என்று டக்ரர் பெரீரா ஏற்கெனவே பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டார். அதுபோலவே டக்ரர் கொல்வின் ஆர். டி சில்வாவும் தெரிவித்துவிட்டார். மற்றவர்கள் அரசாங்கம் நடத்த தாம் உதவிசெய்வதே யன்றித் தாம் பொறுப்பேற்று நடத்த முடியாதென்று அவர்கள் கூறியதிலிருந்து அவர்கள் எதிர்க்கட்சியிலே எப்போதும் இருப்பர் என்று தெரிகிறது. இந்த இரண்டு கட்சிகளும் போனல், சமதர்மிகள் தமிழ்க்காங்கிரஸ் வாதிகள், இந்தியக் காங்கிரஸ வாதிகள், ஓர்சில சுயேச்சைவாதிகள் என்பவர்களே மீந்துளார். இவர்கள் எல்லாமாக 25 பேர்க்கு மேற்படமாட்டார்கள் மிஸ்ரர் சேனநாயக்காவின் ஐ. தே. கட்சியும் சமசமாஜிகளும் எதிர்க்கட்சியிலிருந்துகொள்ள இந்த 25 பேராலும் அரசாங்கம் நடாத்த முடியுமா? டக்ரர் பெரீராவும் மிஸரர் சேனநாயக்காவும் எதிர்க்கட்சியில் இருப்பதன் அர்த்தம் என்ன? சுருங்கச் சொல்லுங்கால் இப்போதுள்ளநிலையில். எதிர்க்கட்சிகளுக்கிடையே ஓர்போதும் ஒற்றுமை ஏற்படப்போவதில்லை. இந்த வேற்றுமையை மிஸ்ரர்சேனநாயக்கா தமக்குவசதியாகப்பயன்படுத்தித் தம் பரிபாலனத்தைத் தமது எண்ணப்படி நடத்திக்கொண்டே வருவர்.

# இலங்கை மந்திரசபை

இலங்கை மந்திரிமார் சபையின் முதற் கூட்டம் நாளைத்தினம் நிகழும் என்றும், அதில் இலங்கைப் பரிபாலனம் விஷயமாக என்னவிதமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பது என்பதுபற்றி விளக்கப்படும் என்றும் தெரிகிறது

பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள்சபை, இம்மாதம் 14ந்திகதி கூடும். அத்தினம் சபைத்தலைவர். உதவித்தலைவர், நிர்வாக சபைகளின் உபதலைவர், செனேற்சபைக்குரிய 15பேர் என்பவர்களின் தெரிவு நிகழும். அதன்பின், பிரதிநிதிகள் சபை நவம்பர்மாதம் 25ம் திகதிக்குத் தவணையிடப்படும்

நவம்பர்மாதம் 25ம் திகதி பாராளுமன்றத்து, பிரதிநிதிகள் சபையும், செனேற் சபையும் மிக ஆடம்பரத்துடன் ஆரம்பமாகும். அப்போது இரு சபைகளும் ஒருமித்துச் கூடும். தேசாதிபதி ஓர் பிரசங்கம் செய்வர்.

# உணவு மந்திரி முயற்சி

## அரிசி விநியோகம் அதிகரிக்கப்படுமா?

இலங்கையின் உணவு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்ரர் ஏ ரத்நாயக்கா, இலங்கையின் உணவு நிலைமையை விருத்தி செய்யத் தம்மாலான முயற்சிகளைச் செய்துவருகிறர் என்று கொழும்பு ரைம்ஸ் பத்திரிகையின் அரசியல் நிருபர் எழுதுகிறர்.

இப்போது இலங்கைக்கு பர்மாவிலிருந்து மாதந்தோறும் 6000 தொன் அரிசி வரையே கிடைக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து இத்தொகையை மாதந்தோறும் 20,000 தொன் ஆக்குதற்கு மிஸ்ரர் ரத்நாயக்கா முயற்சிக்கிறர். அவருடைய முயற்சி சித்தியடையுமானல், இப்போதுள்ள உணவு விநியோக அளவு அதிகரிக்கப்படலாமெனவும், சீவியச்செலவும் குறையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது இலங்கையில், இரண்டுமாதத்துக்குப் போதிய அரிசி இருப்பில் இருக்கிறது. மா இருப்பும் மிகவும் திருப்திகரமாக இருக்கிறது.

பர்மாவிலிருந்து கிடைக்கும் 5000 தொன் அரிசியைவிட, இலங்கைக்கு எகிப்திலிருந்து 18,000 தொன் அரிசி கிடைக்கிறது. எகிப்திய அரிசியின் விலை சேர் ஒன்றுக்கு 62 சதமும, பர்மிய அரிசி 49 சதமும் அரசாங்கத்துக்கு முடிகிறது.

# நியமனம்

## 2 பறங்கியர் 4 ஐரோப்பியர்

பாராளுமன்றத்துக் கீழ்ச்சபைக்கு பின்வரும் அறுவர் தேசாதிபதியால் நியமிக்கப்பெற்றிருக்கின்றனா.

மிஸ்ரர் இ. எப். என். கிறேஷியன் (பறங்கியர்)
மிஸ்ரர் ஜே.ஏ.மார்ட்டினன்(பறங்கியர்)
,, எப். எச். கிறிபித்(ஐரோப்பியர்)
மேஜர். ஜே. டபிள்யூ ஓல்ட்பீல்ட் (ஐரோப்பியர்)
மிஸ்ரர் எஸ்.ஏ.பேக்மன் (ஐரோப்பியர்)
மிஸ்ரர் ஜி. ஆர். விற்பி (ஐரோப்பியர்)

## நீதிபரிபாலனசபை

இலங்கையின் நீதிபரிபாலனப்பகுதி உத்தியோகத்தர்களை நியமித்தல் நீக்கல் என்பவற்றைச் செய்யும் சபைக்குப் பிரதம நீதியரசர் தலைவராயிருப்பர் எனவும், நீதியரசர் ஸி. நாகலிங்கம், நீதியரசர் ஜெயவர்த்தன அங்கத்தவர்களா யிருப்பர் என்றும் ஓர் அரசாங்க அறிக்கை கூறுகிறது,

ஜனவரிமாதம் தொடக்கம் சென்ற ஆகஸ்டு ஈறுகவுள்ள எட்டு மாதங்களில் 58 105,557 ரூபா பெறுமதியான 213,585 தொன் அரிசி இலங்கையில் இறக்குமதியாயிருக்கிறது. இதில் பர்மாவிலிருந்து இறக்குமதியான அரிசியின் தொகை 114,546 தொன். குறித் 8 மாதத்திலும் பிரேஸில் 73,803 தொன் அரிசியும், எகிப்து 13,147 தொன்னும் இலங்கைக்கு அனுப்பின.

இந்திய அரசியல்

# இந்தியா - பாகிஸ்தான் யுத்தமா?

## உற்பாதங்கள் நல்லாயில்லை!

இந்தியாவை இரண்டாகத் துண்டாடிவிட்டால், சமூகக் கலவரமே ஒழிந்துவிடும் என்று அன்று ஜின்ன கூறியது எல்லாம் இன்று பொய்யாய்விட்டன இந்தியா பாகிஸ்தான் என்னும் இரு நாடுகளுக்கு மிடையேயுள்ள தொடர்பு இப்போது மிகவும் மோசமாகிவிட்டது பாகிஸ்தானில் ஹிந்துக்கள் வதை செய்யப்படுகின்றனர். இந்தியாவிலே முஸ்லீம்கள் நிலை ஆபத்தாக இருக்கிறது. இந்த நிலைமை இன்னும் சில காலத்துக்கு இப்படியே இருக்குமானல் இரு நாடுகளுக்கு மிடையே ஓர் யுத்தம் மூண்டுவிடுமோ என்றும் அஞ்சவேண்டியிருக்கிறது. இந்த நிலைமைக்கு இந்தியாதான் காரணம் என்று பாகிஸ்தானும், பாகிஸ்தான்தான் காரணம் என்று இந்தியாவும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றன. சிந்து மாகாணத்தில் அபிவிருத்தி மந்திரியாகவுள்ள ஜனப்கஸ்டார் என்பவர் அடுத்த இரண்டு மாதங்களுக்கிடையில் பாகிஸதானில் 18 வயதுக்கும் 50 வயதுக்கு மிடையிலுள்ள சகலர்க்கும் (பெண்கள் உட்பட) ஆயுதப் பயிற்சியளிக்கவேண்டுமென்றும், யுத்தசந்நத்தராக அவர்களை ஆக்கவேண்டுமென்றும் ஓர் அறிக்கை விட்டிருக்கிறர்

இது இவ்வாறுக, இந்தியப் பிரதமர் சென்றவாரம் புது டெல்கியில் ஓர் கூட்டத்திற் கூறியமையும் குறிப்பிடத்தக்கதாம். எதிர்க்கட்சியை அடக்கி, தமுடைய சமயத்துடன் ஆசாரநுட்டானங்களுடன் ஒத்துப்போகாதவர்களை நசுக்கப் பாகிஸ்தான் கங்கணம் கட்டியிருக்கிறது என்று கூறினும் பொருந்தும். பாகிஸ்தானில் ஹிந்துக்களும் சீக்கியரும் அடையும் உபத்திரவத்தினலேயே இந்தியாவை ஓர் ஹிந்து ராஜ்யமாக்கவேண்டுமென்ற கிளர்ச்சி வலுத்து வருகிறது என்று பண்டிதர் நேரு குறிப்பிட்டார்.

இந்தியாவில் முஸ்லீம்கள் இருக்கக்கூடாது என்றும், அவர்களை விரட்டிக் கலைத்துவிட வேண்டுமென்றும் ஓர் கிளர்ச்சி இப்போது பலமாக உருவாகி வருகிறது காங்கிரஸ் தலைவர்கள் முஸ்லிம்லீக்கருக்கும் ஜின்னவுக்கும் பணிந்தபடியாலேயே விஷயம் இவ்வளவு தூரத்துக்குப்போய்விட்டது என்று ஹிந்துக்களும் சீக்கியரும் கருதத் தொடங்கிவிட்டனர். பண்டிதர் நேரு ஹிந்துக்களைப் பொறுமையாயிருக்கும்படி கேட்கிறர். பாகிஸ்தானிலே [illegible] லாம். அதன் [illegible] இந்தியாவிலுள்ள முஸ்லிம்களை—அவர்கள் இந்தியாமீது விசுவாசமாக நடக்கும் பட்சத்தில்—பழிக்குப்பழிவாங்குதல் முறையாகாதென்று அவர் புத்தி புகட்டுகிறர்.

சென்ற வெள்ளிக்கிழமை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சட்டப் பிரச்சினை நிர்வாகசபையில், பாகிஸ்தான் பிரதிநிதி இந்தியாவிலே முஸ்லிம்களுக்கு விரோதமாக இழைக்கப்படும் "கொடுமைகளை" எடுத்துரைத்தார். அவர் கூறியதாவது "இந்தியாவிலே இன்று முஸல்மான்களுக்கு விரோதமாக நடைபெறும் அட்டூழியங்கள் சொல்லுந்தரமல்ல; நூற்றுக்கணக்கில் அல்ல ஆயிரக் கணக்கில் அல்ல. லட்சக்கணக்கில் முஸ்லிம்கள் வதம் செய்யப்படுகிறர்கள்; லட்சக்கணக்கான முஸ்லிம்களை நபும்சகராக்கி அவர்களை ஹிந்துக்கள் கொடுமைப்படுத்துகிறர்கள். இந்த அட்டூழியங்களுக்கு இந்திய அரசாங்கமும் உதவி செய்கிறது."

இந்தக் குற்றச்சாட்டை இந்தியாவின் பிரதிநிதி ஆணித்தரமாக மறுத்து, இந்தியாவில் வகுப்புக்கலவரங்கள் நிகழ்வதற்கு மூலகாரணம் பாகிஸ்தானில் நிகழும் அட்டூழியம்தான் என்று எடுத்துரைத்தார். பாகிஸதானிலிருந்து வெளியேறிய லட்சக் கணக்கான ஹிந்துக்களும் சீக்கியரும் இந்தியாவுக்கு வந்து பாகிஸ்தான் அட்டூழியங்களைச் சொல்ல, மக்கள் ஆத்திரம் கொண்டு வகுப்புக்கலவரத்தில் ஈடுபடுகின்றனர். ஆனல் இந்தக் கலவரங்களை அடக்க நாம எம்மாலானமட்டும் முயற்சி செய்து சித்தியடைந்து வருகிறேம் என்று இந்தியப் பிரதிநிதி பதிலிறுத்துள்ளார்.

# காந்திய சமதர்மம்

சென்ற 2-10-47ல் காரைநகர்ச் சைவ மகாசபையில் மகாத்மாகாந்தியின் 79வது ஜனன தினக் கொண்டாட்டம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிற்பகல் 4 மணிக்குமேல் மகாத்மாவின் உருவப்படம் ஊர்வலத்தில் மேளவாத்திய சகிதமாக மகாசபை மண்டபத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதன்பின், மகாசபைத் தலைவர் திரு. இ, நாகலிங்கமவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயது. சென்ற 78 வருஷகாலமாக மகாத்மாகாந்தியடிகள் பாரத நாட்டுக்குச் சிறப்பாகவும், உலகத்திற்குப் பொதுவாகவும் ஆற்றியசேவைகளைத் தலைவர் குறிப்பிட்டு இந்தக் காந்தி யுகத்திலே நாம் வாழக் கிடைத்ததைப்பற்றிப் பாராட்டிப் பேசினர்.

இந்துசாதன உதவி ஆசிரியர் திரு, அ. க. சுப்பிரமணியம் அடுத்தபடியாகப் பேசியபோது, மகாத்மாகாந்தியின் தியாக வாழ்க்கையை வற்புறுத்தி, அப்படியான தியாக புருஷர்கள்தான் இந்த இலங்கைக்கும் தேவையன்றி, தேர்தற் காலத்தில் மாத்திரம் தோன்றி மறையும் தலைவர்கள் வேண்டியதில்லை என்று குறிப்பிட்டார். பட்டம் பதவி என்பவற்றை மகாத்மா காந்தி நாடவில்லை. உண்மையான சமூக சேவையையே நாடித் தரித்திர நாராயணருக்காக அடிகள் உழைத்துவருகிறர். இன்று இந்த இலங்கையிலுள்ள மக்களில் [illegible] ஞர் அரைநோக் கஞ்சிக்கும் வழியில்லாது தவிப்ப அந்தக் கேவல நிலையைப் போக்க எங்கள் அரசியல் வாதிகள் சிந்திக்கிலர். அவர்கள் மகாத்மாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஜனங்களுக்காகச் சேவைசெய்ய முற்படவேண்டும் என்றும் கூறி, இலங்கையில் இப்போது நவமாக முளைத்திருக்கும் ருஷிய சமதர்மக் கொள்கைகளைக் கண்டித்துப் பின் வருமாறு கூறினர்;

"ஹிந்துக்களாகிய எமக்கு அந்நியருஷியச் சமதர்மிகளின் புரட்சிக கோஷங்களும் ரத்தக் கோஷங்களும் தேவையேயில்லை உண்மையானசமதர்மம்,எங்கள்—தமிழ்மக்களாகிய எங்கள்—நாம்புகளில் தொன்றுதொட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தச் சமதர்மம்தான் காந்திய சமதர்மம். அதனையே நாம் பின்பற்றவேண்டும்."

இன்னும் நம் பிரதிநிதிகள், தொழிலாளர் அனைவருக்கும் பென்ஷன் வசதிகள் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், இலங்கை வருமானத்தில் 100க்கு 80 விகிதத்தை விழுங்கும் உத்தியோகவர்க்கத்தின் வேதனத்தைக் குறைத்து, எந்த உத்தியோகத்தனுவது 500 ரூபாவுக்குமேல் வேதனம் பெறுத முறையை அநுட்டானத்துக்குக் கொண்டுவந்து, அதனல் மிச்சமாகும் பணத்தை நாட்டின் புநருத்தாரண கைங்கரியங்களுக்குச் செலவிடல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீமான்கள் கே, நவரத்தினம், எஸ. சுப்பிரமணியம், ஏ. அருளம்பலம், என்பவர்களும் பேசினர். மகாசபைக் காரியதரிசி திரு ஏ. தேவராஜாவின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

புதன் அக்டோபர் 8

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 தென்காசி பி கே ராஜம்மா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலைஇசை இசைத்தட்டு 8-30 டி எஸ் சுப்புலட்சுமி புல்லாங்குழல் 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தென்காசி பி கே ராஜம்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 தென்காசி பி கே ராஜம்மா பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 காஞ்சீபுரம் என் எம் வெங்கடவரதன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 நாகம் 7-15 ரேடியோ வாத்யகோஷ்டி 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி எஸ் சுப்புலட்சுமி 8-30 காஞ்சீபுரம் என் என் வெங்கடவரதன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 பழனி விஜயலக்ஷ்மி இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10 முடிவு

வியாழன் அக்டோபர் 9

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 தேசமங்கலம் ஆர் கல்யாண கிருஷ்ணய்யர் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலைஇசை 8-30 கடலூர் கே நடராஜன் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 குரல்வகை இசைத்தட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 கடலூர் கே நடராஜன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ர கானம் இசைத்தட்டு 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சீர்காழி கே சதாசிவம் பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் ஜி கிட்டப்பா இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 தேசமங்கலம் ஆர் கல்யாண கிருஷ்ணையர் வீணை 10-30 முடிவு.

வெள்ளி அக்டோபர் 10

காலை 7 15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கோமதி சங்கர நாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 காஞ்சீபுரம் டி பச்சையப்பா பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மங்களூர் டி வி குஞ்சிதபாதம்பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 மங்களூர் டி வி குஞ்சிதபாதம்பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 காஞ்சீபுரம் டி பச்சையப்பா பாட்டு 5-40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 கோமதி சங்கரநாராயணன் பாட்டு 8 30 அருப்புக்கோட்டை எஸ் கணேசபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

## மனோன்மணி வாசிகசாலை இளைஞர்சங்கம்

கொக்குவில் கிழக்கு மனோன்மணி இலவச வாசிகசாலையில் புரட்டாதிமாசம் 2-ந் தேதி வியாழக்கிழமை மகாத்மாகாந்தி அவர்களின் ஜனனவிழாக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவுக்கு கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதி வி. வன்னியசிங்கம் தலைமை வகித்தார். கந்தர்மடப் பாடசாலை ஆசிரியர் குலரத்தினம் காந்திமகானின் செய்தார் என்னும் விஷயம்பற்றியும், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் S. V சுப்பிரமணியம் அஹிம்சாமூர்த்திகாந்தி என்னும் விஷயம்பற்றியும் பேசினார்கள். சங்க அங்கத்தவர் ஒருவரால் தேசியகீதம் பாடப்பட்டது. இத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## தாரபல சந்திரபல விளக்கம்

பிரம்ம ஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

சென்ம நட்சத்திரமுதல் ஒன்பது ஒன்பது ஒவ்வொரு பரியாயமாக 27 நட்சத்திரங்களும் மூன்று பரியாயங்களாம். சென்ம நட்சத்திரமுதல் அற்றை நட்சத்திரம்வரை எண்ணிவந்த தொகை

ஜன்மசம்பத்விபத்க்ஷேமம் ப்ரத்யரம்
ஸாதகோவத
மித்ரம் பரமமித்ரஞ்ச ஜன்மச்
சேதி புநःபுந:

என்னும் பிரமாணப்படி சென்மம் 1 தேகபீடை, 2 சம்பத்து ஐசுவரியம், 3 விபத்துகாரியநாசம், 4 க்ஷேமம் சந்தோஷம், 5 பிரத்யரம் காரியநாசம், 6 சாதகம் பிரயோசனம் 7 வதைமரணம், 8 மித்திரசுகம், 9 பரமமித்திரம் அதிக சுகம் என்பதாம்

சென்மதாரை காலை ஏழு நாழிகைக்கு மேலும்விபத்துத்தாரைகாலை3நாழிகைக்கு மேலும் வதைத்தாரை காலை 8 நாழிகைக்கும்மேலும் பிரத்தியத்தாரை காலை 8 நாளிகைக்கு மேலும் வந்தால் தோஷமில்லை. தாராதோஷ பரிகாரங்களைச் செய்து அவசியமான கருமங்களைச் செய்துகொள்ளலாம். சந்திரன் ஆட்சி உச்சம், வர்க்கோத்தமம், நட்பாயிருந்தால் தாராதோஷ மில்லையாம்; சூரியன், சுக்கிரன். வியாழம் இவைகளிலொருவர் சந்திர இலக்கினத்திற்கு 3, 6, 10, 11 இவைகளிருந்தால் தாராதோஷமில்லையாம்; சென்ம தாரைக்கு ஆடும், விபத்துத்தாரைக்குச் சர்க்கரையும் பிரத்தியக்தாரைக்கு லவணமும், வதைதாரைக்கு எள்ளும் தானங் கொடுத்தால் அக்குற்றம் நீக்கும். மூன்றும் நட்சத்திரத்தின் முதற்பாதத்தையும், ஐந்தாம் நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தையும், ஏழாம் நட்சத்திரத்தின் இரண்டாம் பாகத்தையும்நீக்கி எஞ்சிய பாகங்களை அவசிய நட்சத்திற் கொள்ளலாம். மூன்றும் பரியாயத்தொன்பதாகிய 27-ம் நட்சத்திரம் அல்லது பாதம் சென்மராசிக்குரியதாயின் குற்றமில்லை: —

### சந்திரபலம் வருமாறு

சென்மராசி முதற் சந்திரனிற்கும் இராசிவரை எண்ணியவழி இருபக்கங்களினும் 1, 3, 6. 7, 0, 11-ம் இராசிகளும், அபர பக்கத்தில், 4 12-ம் இராசிகளும், பூர்வ பக்கத்தில் 2, 5, 9 ம் இராசிகளும் சுபம். ஏனைய அசுபமாம். சென்ம நட்சத்திரத்தி லிருக்கும் சென்ம சந்திரனில் சகல கருமங்களுஞ் செய்யலாமென்றும், ஆனால் சௌளம், ஔஷதப்பிரயோகம், விவாகம் பிரயாண முதலிய கருமங்களைச் செய்யாமல் விலக்கவேண்டுமென்றுங் கூறப்பட்டிருக்கிறது

ஸ்வேதம் வாஸ: விதாதேநு: சங்கோ வா க்ஷீரபூரித:! தேயோவாராஜதஸ்சந்த்ர தோஷோபசாந்தயே!! என்னும் பிரமாணப்படி சந்திரபலமில்லாவிட்டால் வெள்ளைவஸ்திரம், வெள்ளைப்பசு, பால்நிரம்பிய சங்கு, வெள்ளியினாற் செய்த சந்திரப்பிறை இவற்றி லொன்றையேனும் தமது சக்திக்குத் தக்கபடி தானஞ்செய்தல் வேண்டும். அத்தோஷம் நீங்குமென்பதாம்.

உசீரஞ்ச சரீஷஞ்ச சந்தனம் பத்மந்ததா
சங்கேர்யஸ்தமிதம் ஸ்நாநம் சந்த்ரதோ
ஷோபசாந்தயே!! என்னும் வசனப்படி

கோரோசனை, கஸ்தூரி, சந்தனம், தாமரைப்பூ இவைகளைத் தண்ணீரிலிட்டுக் காய்ச்சிச் சங்கினால் அந்தத் தண்ணீரை யெடுத்து ஸ்நானஞ் செய்தால் சந்திரதோஷம் நீங்குமென்பதாம்.

சங்கற்பஞ் செய்யுஞ் சிலர் தாராபலஞ் சந்திரபலம் என்று வாய்ப்பாடமாகச் சொல்லுகின்றார்களே யன்றி, அதன் கருத்து என்ன என்று கேட்டால் தெரியாது விழிக்கின்றார்கள்; என் செய்வது?


வந்துவிட்டது!!!

## முலார்ட்பட்டரி ரேடியோக்கள்

6 வால்ட பட்டரியில்
வேலைசெய்யக்கூடியது

ரூபாய் 500/ பட்டரி இல்லாமல்

யாழ்ப்பாணப்பகுதி ஏஜண்ட்ஸ்:

T. N. LINGAM & SONS.
Motor & Radio Dealers,
248, KK's Road,
JAFFNA.

(Mis 147 3, 7—10—47.)



மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

## கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கோள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, சாங்கேசன்துறைறோட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 33 2—9—47&28.2.48



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



## கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

கால் றாத்தல் விலை ரூபா 5-00

வீ. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std 5 1-7-47—30-6-48 (செ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரிப் பூசை ஆரம்பநாள்

சென்ற ஆவணி மாசம் கஉ-ந்வ (2-9-47) செவ்வாய்க்கிழமை இந்து சாதனப்பிரசுரத்தில் "புரட்டாதிமீ விசேஷ தினங்கள்" என்ற குறிப்பில் 28-ந் உ (14-10 47) செவ்வாய் நவராத்திரி விரதாரம்பம் எனக் குறித்திருந்தேம்; இது வழக்கம்போல் இரகுநாதையர் பஞ்சாங்கத்தைப் பின்பற்றியே குறிக்கப்பட்டது; ஆனல், நவராத்திரி விரதாரம்பம் 29-ந் உ புதன்கிழமை யெனத் திருக்கணித பஞ்சாங்கத்திலும், பருத்தித்துறை வாக்கியகணித பஞ்சாங்கத்தார் இப்பொழுது வெளியிட்டுவரும் கலண்டர்ப் பஞ்சாங்கத்திலும் குறிக்கப்பட்டிருத்தலால், "நவராத்திரி விரதாரம்ப விஷயத்தில் ஆசங்கையுற்றுச் சில அபிமானிகள் எத்தினத்திற் கொள்வது என இங்கு வினவலாயினர்; இவ்விஷடமாக நாம் அச்சுவேலி சிவஸ்ரீ ச குமாரசுவாமிக் குருக்களை வினவியபோது அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

"விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தஷஷ்டி என்னும் விரதங்கள் சாந்திரமானப்படி கொள்ளப்படுவன; பூர்வகாரணாகமத்திலே நவராத்திரி விதி படலத்தில் ஆசுவிஜ சுத்தப் பிரதமை முதல் நவமியந்தமாக நவராத்திரிவிரதங் கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. பருத்தித்துறை வாக்கிய கணிதரும், திருக்கணிதரும ஆஸவிஜசுத்தம் 29-ம திகதி புதன் கிழமையென்று நிர்ணயித்திருக்கின்றமையால், காரணாகம விதியை அனுசரித்து, ஆசுவிஜ சுத்தத்திலேயே கொள்ளவேண்டுமென்று பெறப்படுகிறது.

28-ந் திகதி பிரதமை இராத்திரி வியாபகமாயிருப்பதால், இராத்திரியில் நவராத்திரி பூஜாரம்பம் என்ற விதியைக்கொண்டு, அன்றே தொடங்கவேண்டுமென்று இரகுநாதையர் சொல்லக்கூடும்.

இங்ஙனம்
ச குமாரசுவாமிக்குருக்கள்

இவ்விஷயமாகத் தென்னிந்தியாவிலிருந்து வெளிவருதுள்ள "சுதேசமித்திரன்" சு த திருக்கணித சர்வமுகூர்த்த பஞ்சாங்கம் முதலாஞ் சில பஞ்சாங்கங்களைப் பார்த்தபோது, அப் பஞ்சாங்கங்களிலும் புரட்டாதி மீ 29-ந்உ புதன்கிழமையே நவராத்திரி விரதாரம்பம் எனக் கணிக்கப்பட்டிருக்கின்றது; இந்தியாவிலுள்ள பல பிரதான தலங்களிலும், 29-ம தேதியே நவராத்திரி ஆரம்பமென அறியக் கிடக்கின்றது; யாழ்ப்பாணத்திலேயுள்ள சில கோயில்களின் அதிபர்கள் பூசகர்கள் சிலர் 29-ந்உ தாம கொள்வதெனவும், சிலர் இன்னமும் தாங்கள் எத்திகதி கொள்வதென நிச்சயிக்கவில்லை எனவும், சிலர் மற்றைக் கோயில்களில் நடப்பதைப் பின்பற்றித் தாமும செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கின்றார்கள்; ஆனல் இப்படியான விஷயங்களில் இயன்றவரை ஒரே தினத்தை நியமித்துத் தொடங்குவதே முறையாகும் ஏனைச் சமய வாதிகள் எள்ளாது விடுதற்கு ஏதுவாகவுமிருக்கும்; குறித்த 29-ந் தேதியன்று அமாவாசை வியாபகம் அறவே இல்லையாதலாலும், அன்று முலைக்காலத்திலே பிரதமையில்லையாயினும், கும்ப ஸ்தாபனம் செய்யும் நேரமாகிய உச்சிக்காலத்திலே பிரதமையுண்டெனச் சொல்லப்படுதலாலும், இரகுநாதையர் பஞ்சாங்கமொன்றின்றி அறிந்தவரையில் ஏனைய பஞ்சாங்கங்களிலெல்லாம் நவராத்திரி யென்றபடி ஒன்பது இரவே கொள்ளப்படுதலாலும், நிகழும் புரட்டாதி மாசம் 29-ந் உ புதன்கிழமை நவராத்திரி பூசை ஆரம்பத்தைக் கொள்வதே உத்தமமென எண்ணுகின்றோம்.

## மதுவிலக்கு

2-ம் பக்கத் தொடர்ச்சி

கைகள் விளையாட்டுகள் முதலியவைகளைத் தருதல்.

5. லாகிரி வஸ்து விலக்கை ஆதரிப்பதற்காக பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காக அவைகளை விற்பதன்மூலம் கிடைத்த பணத்தைச் செலவிடுதல்.

அந்தப் பணத்தைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்காகவோ வேறு பொதுக் காரியங்களுக்காகவோ செலவிடுதல் தவறு. அந்தப்பணத்தை தேச நிர்மாண வேலைகளுக்கு செலவிடலாமென்றதோன்றுப. அந்த எண்ணத்துக்கு இடங் கொடுத்தலாகாது. இந்த வரிப்பணம் போய்விட்டால் நஷ்டம் ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாக ஜனங்களுடைய ஒழுக்கமும் ஆரோக்கியமும் உயரும், இது அனுபவத்திற் கண்ட விஷயம். இந்தத் தீமையை ஒழித்துவிட்டால் தேசத்தின் வருவாயை அதிகரிக்க வேறு நல்ல வழிகளை சுலபமாக ஏற்படுத்திக்கொள்ள முடியும்,

## கடிதம்

இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்கட்கு

ஐயா,

1947-ம் ஆண்டு சித்திரைமாசக் கடைசியில் நடக்கவேண்டிய ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பிரவேச, பால பண்டித பரீட்சைகள் இன்னும் நடைபெறுமலிருப்பது யாவர்க்கும் துக்கமான காரியமாகும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்படும் பிரவேச பாலபண்டித பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 2 மாசங்கள் கழிந்தன.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்ச்சங்கம் இவ்வளவு அசட்டையாய் இருப்பது மிக வியப்பாய் இருக்கின்றது. இந்த ஆண்டு முடிகிறதற்கு இன்னும் மூன்று மாசங்கள் இருக்கின்றன. பரீட்சைக்கு "அப்பிளிக்கேஷன்" அனுப்பி ஏழு மாசங்கள் கழிந்துவிட்டன. இச் சோதனைகள் நடத்துவதற்குப் பணமில்லையா?யா துகாரணத்தால் இச்சோதனைகள் நடைபெறவில்லை தயவுசெய்து தங்கள் பத்திரிகையில் இதனை வெளியிட்டு விபரத்தை அறிய விரும்புகிறேன்.

இங்ஙனம்
வி. கந்தையா

மட்டக்களப்பு
3-10-47.

## காந்தி ஜெயந்தி

நாளது சர்வசித்துவருஷம் புரட்டாதி மாசம் 16-ம் திகதி வியாழக்கிழமை மகாத்மாகாந்திஜியுடைய பிறந்தநாட் கொண்டாட்டம் சித்தங்கேணி கணேசவித்தியாசாலையில் நிகழப்பெற்றது.

திருவாளர்கள் மா. கனகசபாபதி, மேற்படி வித்தியாசாலை மனேஜர், தேசஊழியன் எஸ். சேனுதிராசா, பண்டிதர்கள் இராமலிங்கம், சிவபாதம், ஆரியரத்தினம் சுப்பிரமணியம், ஆயுர்வேத பண்டிதர் கெங்காதரம் முதலியோர்கள் உட்பட வலிகாமம் மேற்கிலுள்ள அனேக பிரமுகர்கள் சமுகமளித்தனர். மேற்படி வைபவம் பண்டிதர் ஸ்ரீமான் ச. சங்கரப்பிள்ளை சங்கானைப்பகுதி விவாகம், பிறப்பு, இறப்பு றிஜிஸ்ரார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மகாத்மாகாந்தி நாமத்தைக் கொண்டு, வலிகாமம் மேற்குப் பகுதியில் ஓர் மத்திய நெசவு கைத்தொழில் நிலையம் நிறுவப்படல்வேண்டும் என்னும் ஓர் தீர்மானம் ஏகமனதாகநிறைவேறியது தேவாரத்துடன் தொடங்கி; மகாத்மாஜிக்குஜே என்னும் குதூகல கோஷத்துடன் மேற்படி நிகழ்ச்சி நிறைவேறியது. —சடித

## 8,453 தொன் அரிசி

சென்ற வெள்ளிக்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் எகிப்திலிருந்து 8,453 தொன் அரிசி இறக்குமதியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வா றமரர் பொருமெல்லையி லீசன் மைந்தன்
கைவார் சிலையைக் குறித்தேகணை நான்கு தூண்டி
மெய்வா ரிதிகட் கிறைவன்றனை வீட்டி மற்றும்
ஐவா ளியினுற் சமனுற்றல் அடக்கி னனல்.

மேலே சொல்லப்பட்ட பிரகாரம் தேவர்கள் போர்செய்யும்போது முருகமூர்த்தி தமது திருக்கரமொன்றிற் பொருந்திய நீண்ட வில்லை உறவளைத்து நான்கு பாணங்களைத் தொடுத்து நிலைபெற்ற சமுத்திரங்கட்குத் தலைவனாகிய வருணனை வதைத்து, வேறு ஐந்து அம்புகளினால் யமனுடைய உயிர்வலி யுடல்வலிமைகளை அடங்கச்செய்து நின்றனர் என்பது கருத்து.

சமனுற்றல் அடக்கினன் என்பதற்கு "யமனது வலிமையை அடக்கினர்" எனப் பொருள் கூறுதல் சிறிதும் பொருந்தாது. அந்த நேரத்தில் முருகமூர்த்தியோடு மாறுபட்டுச் சமர்செய்த இந்திரன், வருணன், யமன், சந்திரன், சூரியன், வாயுதேவன், அக்கினிதேவன் என்னும் இச்சில தேவர்கள் மாண்டன ரென்பது "ஒல்லாதவரிற் பொருதே சில வும்பர்வீழா" எனப் பின்னர் இப்படலத்தில் வரும் திருவிருத்தத்தானும், "சுப்பிரமணியர் யமனை ஐந்து பாணங்களினாலும், அக்கினியை மூன்று பாணங்களினாலும், வருணனை நான்கு பாணங்களினாலும், வாயுவை இரண்டு பாணங்களினாலும் சூரியனை இரண்டுபாணங்களினாலும், சந்திரனை ஒரு பாணத்தினாலும் எய்து தனித்தனியாக அவர்களை வீழ்த்தினர்" என முதனூன்மொழிபெயர்ப்பிற் காணப்படுதலானும் "சமனுற்றல் அடக்கினன்" என்பதற்கு யமனைக் கொன்றார் எனப் பொருள் கோடலே பொருந்துமென்க.

[சமனுற்ற லடக்கினன்-யமனைக் கொன்றார்] (56)

ஓரம் பதனுன் மதிதன்னையும் ஒன்றி ரண்டு
கூரம் பதனுற் கதிர் தன்னையுங் கோதின் மைந்தன்
ஈரம் பதனல் அனிலத்தையும் ஏவு மூன்றால்
வீரம் பகர்ந்த கனலோனையும் வீட்டி நின்றான்.

இத்திருவிருத்தத்தின் பொருள் வெளிப்படை. மதி-சந்திரன்; கதிர்-சூரியன்; ஒன்று இரண்டு கூரம்பதனுற் கதிர் தன்னையும் என்பதற்கு உரைகாரர் "கூர்மையாகிய மூன்று பாணங்களாற் சூரியனையும்' எனப்பொருள் கொண்டு, ஒன்றிரண்டு உம்மைத் தொகையெனவும், பண்புத்தொகையாகக் கொண்டு இரண்டெனின் முதனூற்கு விரோதமாமெனவும் விருத்தியுரை கூறியுள்ளார்; ஆனல் முதனூன் மொழிபெயர்ப்பில் "சூரியனை இரண்டு பாணங்களினாலும்...." என எழுதப்பட்டிருக்கின்றது; கோதின் மைந்தன்-நிர்மலராகிய குமாரக்கடவுள்; அனிலம்-வாயுதேவன். கனலோன்-அக்கினிதேவன். ஏவு என்பதில் உகாரஞ் சாரியை. ஏ-பாணம்.

முன்னர்ச் சூரபன்மன் தன் தம்பியாகிய சிங்கமுகன் தாரகன் முதலியோருடன் திக்குவிஜயஞ் சென்றபோது அக்கினி திக்கையடைந்து இவ்வக்கினிதேவனேடு எதிர்த்தலும் இவன் முதல் வீரம் பேசித் தாரகன் சேனையோடு எதிர்த்துநின்று சமர்செய்து ஈற்றில் அத்தாரகன் வலிமைக்கு அடங்கினனென்பது இப்புராணத்தின் திக்குவிஜயப் படலத்திற் சொல்லப்பட்டிருத்தலின், "வீரம் பகர்ந்த கனலோன்" என்றாரென்க. (57)

நின்றா ரெவருங் குமரேசன் நிலைமை நோக்கி
யின்றா ரையுமற் றிவனேயடு மேன்று தேறி
யொன்றா னசிம்புள் விறல்கண் டரியுட்கி யோடிச்
சென்றா லெனவே யிரிந்தோடினர் சிந்தை விம்மி.

அப்போது மாளாது தப்பி நின்ற தேவர்களெல்லோரும் குமாரக் கடவுளின் திறமையைக் கண்டு, இந்தப் பாலகனே இப்பொழுது இங்கு நிற்கும் எவரையும் கொல்வான் என்று தெளிந்து, மனமுடைந்து ஒப்பற்ற சரபப் பறவையின் வலிமையைக் கண்டவுடனே சிங்கமானது பயந்தோடுவது போல, பின்னிடைந் தோடினர் என்பது கருத்து.

நின்றாரெவரும் - திக்குப் பாலகருள் இந்திரன், வருணன், யமன், வாயு, அக்கினி, யென்னுமிவர்கள் மாண்டொழிய, எஞ்சி நின்ற திக்குப் பாலகரும்; கிரகங்களுட் சந்திரன் சூரியன் என்னுமிவர்கள் மாண்டொழிய எஞ்சி நின்ற கிரகங்களும் ஏனைய தேவருமாம். நிலைமை - போராற்றல் முதலியன. மிருகேந்திர னெனப்படுஞ் சிங்கமும் சரபப் பறவையைக் காணின் அஞ்சியகலுமாதலின் இவ்வுவமானங் கூறப்பட்டது. (58)

ஓடுஞ் சுரர்கள் திறநோக்கி யுதிக்கும் வெய்யோன்
நீடுங் கதிர்கள் நிலவைத் துரக்கின்ற தேபோல்
ஆடுங் குமர னவரைத் துரந்தண்டர் முன்னர்
வீடுங் களத்தி னிடையேதனி மேவி நின்றான்.

இங்ஙனந் திருவிளையாடல் செய்தருளி நிற்குங் குமாரக் கடவுள், தம்முடன் நிர்வகித்து நின்று யுத்தஞ் செய்யவியலாது பின்னிடைந்தோடுபவர்களாகிய தேவர்களுடைய இயல்பைக் கண்டு, கிழக்குத் திசையில் உதயஞ் செய்கின்றவனாகிய சூரியனுடைய கிரணங்களானவை அந்நேரம் மேற்குத் திசையிற் காணப்படும் பிராதக்கால சந்திரனது நிலாவை யொதுக்குந் தன்மையென, அத்தேவர்களை ஓடச்செய்து, அத்தேவர்களுட் சிலர் முந்தியே மாண்டு கிடக்குமிடமாகிய போர்க்களத்தில் தனியே பொருந்தி நின்றாரென்பது கருத்து.

துரந்து எனத் தன் வினையிலிருப்பினும் ஓடச்செய்து எனப் பிறவினையில் வைத்துப் பொருள் கொள்ளப்பட்டது; சூரியன் துரத்தலின்றி நிற்க, கிரணங்களே சந்திரிகையை ஒதுங்கச் செய்யுமாறு. முருகக் கடவுள் அந்த யுத்தகளத்திலேயே நிற்ப, அவரது பார்வை அத்தேவர்களை ஓடியொதுங்கச் செய்ததென்றபடி; இனி தனிமேவி யென்பதற்கு ஒப்புவமையின்றி ஒருதன்மையோடு தொன்மைபோல் நின்றருளினரெனப் பொருள் கோடலும் பொருந்துமெனக. (59)

## கொடியின் தத்துவம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

திருவாசகம் முதலிய திருமுறைப் பகுதிகளில் கொடியைப்பற்றி வந்த மேற்கோள்களை எடுத்தாண்டோம். இனித் தேவாராதிகளில் அங்கங்கே அளவற்ற மேற்கோள்கள் சாலப் படுகின்றன. இவைகளேயன்றி சமய நிலயங்களாகிய திருக் கோயில்களில் கொடிக்கு ஒரு ஒப்பற்ற இடம் வாய்த்திருக்கிறது என்று கூறவேண்டும். ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு கொடிக்கம்பம் உண்டு. ஆலயத்தில் நடக்கும் எந்தத் திருவிழாவிற்கும் கொடியேற்றம் இன்றியமையாதது கொடியேற்றித்தான் ஆலய அதிகாரிகள் திருவிழா தொடங்குவார்கள். அப்போதுதான் அவ்விழாவைச் சரியாக நடத்துவோம் என்று உறுதி செய்துகொள்கிறார்கள். திருவிழா முடிந்ததும் கொடியிறக்கம் நடைபெறும். இவ்விரண்டு சடங்குகளுக்கும் இடையில்தான் திருவிழா நடைபெறும். ஒரு ஊரில் கொடியேற்றம் ஆகி இருக்கும் மட்டும் அவ்வூர் மக்கள் நோன்பு இருப்பார்கள். வெளியூருக்குப் போதல் முதலிய செய்கைகளைக் கொளளமாட்டார்கள் இது தமிழர் மரபு

**கொடிக் கவி**

சைவத்தில் சந்தானசாரியர்களில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் அவர்கள் தில்லை வாழந்தணர்களில் ஒருவர். அவர் தன் ஆசாரியரான மறைஞான சம்பந்தரின் எச்சிலை உண்டார் அதனை அறிந்த அந்தணர்கள் அவரை விலக்கி வைத்திருந்தார்கள். சிவாச்சாரியர் கொற்றவன் குடியில் மடம் அமர்த்தி அங்கே எழுந்தருளியிருந்தார். அப்படி இருக்கையல் தில்லையில் பெருந் திருவிழா வந்தது. ஏனைய அந்தணர்கள் கொடியேற்றினர்கள். அது ஏறவில்லை, அவர்கள் மிகவும் தயங்கிக்கொண்டிருக்கையில் 'உமாபதியாரைத் தருவிப்பீர்' என வானொலி எழும்பிற்று. உடனே அந்தணர்கள் கொற்றவன் குடி சென்று உமாபதியாரைத் தோள்மீது ஏற்றிக்கொண்டு கொடிக் கம்பத்திற்குக் கொணர்ந்தார்கள். உமாபதி சிவாசாரியரும் நான்கு அரும் கவிகள் பாடி கொடியேற்றினர். கொடியும் ஏறி திருவிழாவும் நடைபெற்றது இக் கவிகளே 'கொடிக்கவி' என்ற நூலாயிற்று. இது மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாக விளங்குகிறது. இக்கொடிக்கவியில் சைவ சித்தாந்தக் கருத்து அடங்கி இருக்கிறது.

**கொடி கட்டுதலின் உட்பொருள்**

1. "ஞானவொளி மலத்திருள் இரண்டிற்கும் உயிரே இடம். இவற்றில் ஒன்றுயிருந்தால் மற்றொன்று மறையும். இருள் மலம் தாக்காதவாறு உயிர்க்குயிராய் இறைவன் நின்று உண்மை யறிவு விளக்குவான். அப்போது மும்மலத்தே மூழ்கி இருக்கும் உயிர் திருவருளைக் கூடும்படி கொடி கட்டுகிறேன"

2 "அரும் பெருந்தகையே, நீ யார் உன் அருட்சத்தியாது, உயிர் யாது, மலம் யாது, சகல நிலை தனி நிலைகள் எவைகள். நீ காணாத உலகம் எங்குளது, எல்லாமாயிருக்கும் உன்னைக் காண உன் கோபுர வாயிலில் கொடி கட்டுகிறேன்."

3 "சொல்லாலும் நினைவாலும் எப்போதும் எட்டப்படாதானும் உயிரறிவால் அறியாதானும் ஆன பெருமானை அறிந்து உயிரறிவிற் பிரியாவகை அனுபூதியில் கலந்து அக்கலப்பிலே நிலைபெறும் அருளினை நல்கும்படி கொடி கட்டுகிறேன்."

4 'ஐந்தெழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்துகளோடு பிஞ்செழுத்தும் (வ) பெருவெழுத்தும் (சி) நெஞ்சிலே பதியும்போது பேசும் எழுத்தாகிய அருட்சத்தி பேசா எழுத்தாகிய சிவம் இவைகளைத் தெளிவாகக் காட்டுவதே கொடியின் குறியாகும். அதனை ஏற்றுகிறேன்" என்பன அக்கவிகளின் பொருள்.

## ஐயனர் மகத்துவம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

. . . ணனைக்கொண்டு பிடிப்பித்து மீளாச் சிறையிலிட்டுச் சித்திரவதை புரிவிக்காது விடத் தவறுவேனுகில், நான் சூரபன்மனுக்குத் தங்கையுமல்ல, என் மார்பிலிருப்பன கொங்கையுமல்ல" என்று சபதமிட்டுத் தன்முகியோடு அவ்விடத்தை விட்டகன்று மகேந்திரபுரியை நோக்கிச் செல்வாளாயினள்; அசுரத்தி உரைத்த சபத மொழியைப் பொருட்படுத்தாராய் வீரமாகாளர் தம் அயலே கவலையொருவாறு தேறி நின்ற இந்திராணியைப் பார்த்து, "அம்மே, ஒன்றற்கும் அஞ்சவேண்டா; உமது நாயகன் மீண்டு வருங்காறும் எங்கள் ஐயனரின் ஆஞ்ஞைப்படி நான் உம்மைப் பாதுகாப்பேன்" என்றுரைத்துத் தம்மிடத்திற்கு மீண்டார்; அயிராணியும் தன் நாயகன் உத்தேசித்துச் சென்ற கருமங் கைகூடவேண்டுமென்ற நியதியோடு, அப்பூஞ்சோலையிற்றானே பிறிதோரிடத்திலிருந்து தவஞ்செய்தாள்.

சூளுரைத்துச் சென்ற அசமுகி தனக்கு நேர்ந்த இடையூற்றைப் பானுகோபன் முதலிய மருகமாருக்கும், சூரபன்மன முதலாம் தமயன்மாருக்கும்முறையிட்டதையும், சூரன் பெருங் கோபங் கொண்டானுய்த் தன் இளையாளுக்கு இடர் விளைத்தற் கேதுவாயிருந்த தேவனையும் இந்திரன் முதலிய ஏனைய தேவமகளிர்களையும் அகப்படுத்திவரும்படி பானுகோபனுக்குஆஞ்ஞை சய்ததையும், பானுகோபன அப்பூஞ்சோலையிற்போய் பார்த்தபோது அங்கு எவருங் காணப்படாமையும், இதற்கிடையிற் கைலைக்குச் சென்ற இந்திரன் அங்கு பரமசிவனைத் தரிசிக்க இயலாதுய்க் கவலையோடு மீண்டுவந்தபோது, தன தேவி வாயிலாக அப்பூஞ்சோலையில் நேர்ந்த அனர்த்தங்களை யெல்லாங் கேட்டு அதிக கவலையும் அச்சமுங் கொண்டு தன் தேவியோடு வேற்றிடத்திற் கரந்திருந்ததும் பிறவுங் கந்தபுராணத்தில் விபரமாகக் கூறப்பட்டுள்ளன.

இங்கே எடுத்துக் காட்டப்பட்ட வரலாற்றினுல் ஐயனர் சிவாயஸமான ஒரு உருத்திர ரென்பதும், சிவாஞ்ஞைப்படி உலகிலுள்ள உயிர்களைப் பாதுகாக்கு' ஆற்றல் பெற்றவரென்பதும், அரிபிரமேந்திராதி தேவர்களும் போற்றும் மகத்துவமுடையவரென்பதும், வாதமூர்த்தி யென்பதும், அம்மூர்த்தியை ஆகமவிதிப்படி கோயிலமைத்துப் பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திகங்கள் நடத்தி ஆதரித்தால் நன்மையுண்டாமென்பதும், அவரைச் சிறு தெய்வமாக நினைத்து ஆகமவிதிக்குமாருக, அவர் முன்னிலையில் ஆடு கோழி வெட்டிப் பலியிடுதல், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசுவதுபோல, மகாபாதகமாய் முடியுமென்பதும் இன்னேரன்ன பிறவும் பெறப்படலாயின.

---

இக்கருத்துக்களைக் கவியால் சொல்லி கொடி ஏற்றின உமாபதி சிவாச்சாரியார் பெருந் திருவிழா நடக்கையில் உடன் இருந்து அவ்விழாவில் நடக்கும் பத்து செயல்களான தசகாரியம் என்ற பெயரால் வழங்கிவரும் கருத்துக்களை "உண்மை நெறி விளக்கம்" என்ற நூலில் கூறியருளினர். இவ்விரு சிறந்த சிறு நூல்களே திருவிழாவின் உட்பொருளை விளக்குவன ஆகும். இதனைஉணராத பொதுமக்கள் கோயில் திருவிழாக்களை உச்ச சடங்குகளாகப்பாவித்து வெறும் ஆடம்பரங்களில் புகுந்து உலகாயுதம் ஆக்குகிறார்கள். மக்கள் உண்மை நெறியை [illegible] கள்ளாக!

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனல் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்ளுக்குப் புலப்படும்.

**பத்திரானு மாளிகை**
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கினேஸ வங்கி,

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday. October 7, 1947

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org